OS.47/2016 P.W.1-ஜெயந்தி மாலா க/பெ.சம்பத் 07.08.2026

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

எனக்கு தானமாக கொடுத்த கிருஷ்ணராஜ கப்லியில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் இதுவரையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு தெரிந்து அந்த சொத்தின் தற்போதைய மதிப்பு எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. தற்போது வரை அந்த சொத்து Joint Vencher-க்காக ஒப்பந்தம் போடப்பட்டு 8 வீடுகள் கட்டி அதில் 50 சதவீதம் கட்டுமான நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. மீதி சொத்து என்னுடையதாகும். மேற்படி ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணங்களை பார்த்தால் சொத்தின் மதிப்பு மற்றும் கட்டுமான பணிகளின் மதிப்பு தெரியவரும் என்றால் சரிதான்.

2. 1வது அட்டவணை சொத்தின் மதிப்பு எவ்வளவாக இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மதிப்பு குறிப்பிடப்படவில்லை. தாவா 1வது அட்டவணை சொத்தில் நான் எந்த காலத்திலும் சுவாதீனத்தில் இல்லை என்றால் திருமணம் ஆன பிறகு நான் அந்த சொத்தில் சுவாதீனத்தில் இல்லை. என்னிடம் காட்டப்படும் பிராதில் 1வது அட்டவணை சொத்தினுடைய மதிப்பு ரூபாய் 6 கோடி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தோரயமான மதிப்பு ரூபாய் 6 கோடி என்று சொல்லியுள்ளேன்.

3. நான் சொன்னவாறு என் தாய், தந்தையருடன் நல்ல உறவில் இருந்து வந்தேன் என்றால் சரிதான். 2005-ல் எனக்கு அவர் பெயரில் உள்ள சொத்தை எனக்கு கொடுத்ததன் மூலமாக அவர்களுடன் நான் நல்ல உறவில் இருந்தது தெரியவரும். தனராஜின் வாரிசுகள் சாந்தி, சதீஷ்ராஜ், புஷ்பராஜ், பிரதீப்ராஜ் ஆகியோரின் எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். 08.04.2005 அன்று என் தாய், தந்தையருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக அவர்கள் சொல்லியுள்ளார்கள் என்றால் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை, என் சகோதரரின் வாரிசுசகள் தவறாக சொல்லியுள்ளார்கள் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

4. என் தாய், தந்தையர் மீது பொய்யான புகார் 2009ல் காவல் துறையில் கொடுக்கப்பட்டதால் அவர்கள் எங்களுடைய இறப்பிற்கு கூட வரக்கூடாது என்ற மனநிலையில் இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு இருந்திருந்தால் எனக்கு சொத்து எதுவும் கொடுத்திருக்க

மாட்டார்கள். அவர்கள் மீது புகார் கொடுக்க எந்த முகாந்திரமும் எனக்கு இருந்ததில்லை. என் தகப்பனாருக்கு இருந்த மன அழுத்தத்தையும், கோவத்தையும் காட்டுவதற்காக 23.01.2009 அன்று ஒரு கடிதம் எழுதி அதன் வாயிலாக என்னுடன் இருக்கின்ற தொடர்பை முறித்துக் கொள்ள வேண்டுமென்று வெளிப்படுத்தியுள்ளார் என்றால் அந்த கடிதம் எனக்கு வந்தது.

5. நான் எந்த காலத்திலும் என் தாய், தந்தையருடன் நல்ல உறவில் இல்லை என்றால் சரியல்ல. அவர்களுடைய சொத்தின் மீது மட்டும் கவனமாக இருந்தேன் என்றால் சரியல்ல. இதை நான் கண்டிப்பாக நான் மறுக்கிறேன். என் தாய், தந்தையரின் சொத்தில் இருந்து வந்த வருமானங்களை அனுபவித்தது என் இரு சகோதரர்கள் மட்டுமே. என் என் தாய், தந்தையருக்கு என்ன உதவி செய்துள்ளேன் என்றால் நான் உதவி செய்கின்ற நிலையில் என் தாய், தந்தையர் இல்லை, அவர்களே நல்ல உயர்ந்த நிலையில் இருந்தார்கள். என் பெற்றோர்கள் தனராஜ், பாஸ்கர் ஆகியோர்கள் பெயரில் உயில் எழுதி வைத்துள்ள விவரம் எனக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் நான் பாகம் கேட்டு வழக்கு அறிவிப்பு அனுப்பிய பிறகு அவர்கள் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள். அப்பொழுது தான் எனக்கு தெரியவந்தது. நான் அந்த உயிலை பார்க்கவோ, ஏற்றுக்கொள்ளவோ இல்லை. அந்த ஆவணத்தின் அசலையோ, நகலையோ இதுவரையில் நான் பார்த்ததில்லை.

6. அந்த உயில் ஆவணத்தை பார்க்காமலேயே நான் அதை ஆட்சேபனை செய்கிறேன் என்றால் என் அம்மா 13.08.2013ல் இறந்து போனார். செப்டம்பர் மாதம் 2013ல் நான் என்னுடைய அம்மா விட்டிற்கு வந்த போது என் அண்ணன் என்னை வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை. அது குறித்து பழவந்தாங்கல் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். அந்த காவல் நிலையத்தில் உயிலை படித்து காட்டினார்கள். என்னுடைய அம்மா இறந்த தேதியை நான் தவறாக சொல்லிவிட்டேன். காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மூலமாக உயிலின் விவரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நகலை அப்பொழுது கேட்டேன். அதனை நீதிமன்றத்தின் மூலம் வாங்கிக் கொள்ள சொன்னதால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். வேறு எதுவும் காவல் நிலையத்தில் சொல்லவில்லை.

7. உயில் பொறுத்து நான் இந்த வழக்கில் பரிகாரம் எதுவும் கேட்டுள்ளேனா என்றால் உயிலை நான் மறுக்கிறேன். எனக்கு சேரவேண்டிய பாகத்திற்குரிய மதிப்பிற்கு 2005

வாக்கிலேயே ஒரு மதிப்பு மிக்க சொத்தை என்னிடம் கொடுத்துவிட்டார்கள், அதன் பிறகும் நான் தொடர்ந்து என் சகோதரர்களுக்கு தொந்தரவு கொடுக்கும் விதமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பா, அம்மாவிற்கு சொந்தமான சொத்து என்பதால் பாகப்பிரிவினை கேட்கிறேன். என் சகோதரர்களை தொந்தரவு செய்யும் நோக்கவில்லை.

8. புஞு மெட்டல்ஸ் என்னுடைய அப்பா, அம்மாவிற்கு இருந்தது என்பதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தற்போது என்னிடம் எந்த ஆதாரமும் இல்லை. புஞு மெட்டல்ஸ் விற்ற பணத்தை கொண்டு எதிரில் உள்ள சொத்தை தற்போது என் சகோதரர் வாங்கியுள்ளார். நான் எந்த சந்தர்ப்பத்திலும் கூட்டு அனுபவதாரராக இருந்ததில்லை, என் தாய், தந்தையர் எழுதி வைத்த உயிலை தெரிந்து கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது, உயில் குறித்து ஆட்சேபனை தெரிவிக்காத நிலையில் இந்த வழக்கை தொடர்ந்து நடத்த இயலாது என்றால் உயில் போலியானது என்று என் வழக்கில் சொல்லியுள்ளேன்.

9. நான் பாகப்பிரிவினை கேட்டுள்ள சொத்தை விட பல மடங்கு அதிக மதிப்புடைய சொத்து 2005லேயே எனக்கு கொடுத்து விட்டதால் வழக்கு சொத்தில் எந்த பாகமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. வாசுதேவன், தனலட்சுமியை பொறுத்த அளவில் அவர்கள் எழுதி வைத்த உயில் செல்லுபடியாகும் என்றால் சரியல்ல. அந்த உயிலின்படி தாவா சொத்தானது தனராஜிக்கும், பாஸ்கருக்கும் சொந்தமான சொத்து என்றால் சரியல்ல. உயில் போலியானது. பாகம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை